## உச்சநீதிமன்றத்தில் கருணை மதிப்பெண்களை ரத்து செய்ய ஒப்புதல்: 'நீட்' முறைகேட்டிலிருந்து தப்பிக்க

# ஒன்றிய அரசு முயற்சிப்பது திறமையின்மையின் மற்றொரு ஒப்புதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

சென்னை, ஜீன் 15 -

**உச்சநீதிமன்றத்தில் கருணை மதிப்பெண்களை ரத்து செய்ய ஒப்புதல் அளித்ததன் மூலம் 'நீட்' முறைகேட்டிலிருந்து தப்பிக்க ஒன்றிய அரசு முயற்சிப்பது அவர்களின் திறமையின்மையின் மற்றொரு ஒப்புதலாகும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

நீட் கருணை மதிப்பெண் வழங்கப்பட்ட 1,563 மாணவர்களுக்கும் மறுதேர்வு நடத்தப்படும் என்று உச்சநீதிமன்றத்தில் தேசிய தேர்வு முகமை வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

மறுதேர்வு ஜீன் 23ஆம் தேதி நடத்தப்படும் என்றும், 30ஆம் தேதிக்குள் முடிவுகள் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வெழுதியவர்களில் 1,500க் கும் அதிகமான தேர்வர்களுக்கு அந்தத் தேர்வை நடத்திய தேசிய தேர்வு முகமை (என்டிஏ) தன்னிச்சையாக 70 முதல் 80 மதிப்பெண்கள் வரை கருணை மதிப்பெண் என்ற பெயரில் கூடுதல் மதிப்பெண் வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், இந்த விவகாரத்தைத் தெளிவுபடுத்தும் வரை, இளநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கு தடை விதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.



முன்னதாக, நீட் தேர்வு குளறுபடியை சுட்டிக்காட்டியும், மறுதேர்வு நடத்த வலியுறுத்தியும் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை செவ்வாய்க் கிழமை பரிசீலித்த நீதிபதிகள் அமர்வு, "நீட் தேர்வின் புனிதத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டு, அந்த மனுக்கள் தொடர்பாக பதிலளிக்குமாறு ஒன்றிய அரசு, என்டிஏ மற்றும் பிகார் மாநில அரசுக்கு நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த நிலையில், தேசிய தேர்வு முகமை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலில், தேர்வு மையங்களில் சில தேர்வர்கள் நேரத்தை இழந்ததால் கருணை மதிப்பெண் வழங்கப்பட்டதாகவும், விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி, அந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கருணை மதிப்பெண் ரத்து செய்யப்படுவதாக தெரிவித்தனர்.

மேலும், நேரக் குறைபாடால் பாதிக்கப்பட்ட 1,563 மாணவர்களுக்கும் ஜீன் 23ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்படும் என்றும், விருப்பமுள்ள வர்கள் கலந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மறுதேர்வு முடிவுகள் 30ஆம் தேதிக்குள் வெளியிடப்படும் என்று தேசிய தேர்வு முகமை உச்சநீதிமன்றத்தில் பதிலளித்துள்ளது.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் மறுதேர்வுக்கான அறிவிப்பாணையை வெளியிட உத்தரவிட்டனர். மேலும், ஜீலையில் மருத்துவ கலந்தாய்வு நடப்பதால் ஜீன் 30க்குள் முடிவுகளை வெளியிடுவதை உறுதி செய்ய அறிவுறுத்தினர்.

நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கருணை மதிப்பெண்களை ரத்து செய்ய உச்சநீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டதன் மூலம் சமீபத்திய NEET முறைகேட்டிலிருந்து தப்பிக்க ஒன்றிய அரசு முயற்சி செய்வது அவர்களின் திறமையின்மையின் மற்றொரு ஒப்புதலாகும்.**

**மாநிலங்களின் உரிமையைப் பறித்த பிறகு, முறைகேடுகளின் மையமாக விளங்கும் பிரச்சினைகள் மற்றும் ஒழுங்கற்ற முறையில் தேர்வுகளை நடத்துதல் போன்ற முக்கியப் பிரச்சனைகளில் இருந்து கவனத்தைத் திசைதிருப்ப அனுமதிக்கக் கூடாது.**

**ஒன்றிய அரசின் திறமையின் மையையும், இலட்சக்கணக்கான மாணவர்களின் வேதனையைப் பற்றிய அவர்களின் அக்கறையின்மையையும் கண்டிக்கும் அதே வேளையில், மருத்துவப் படிப்பு களுக்கான தேர்வு முறையைத் தீர்மானிப்பதில் மாநில அரசுகளின் பங்கை மீட்டெடுப்பதுதான் இந்தப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## குவைத் தீ விபத்து ; உயிரிழந்த தமிழர்கள் குடும்பத்தாருக்கு தலா ரூ.5 லட்சம் நிதி உதவி!

# 7 தமிழர்களின் உடல்களைக் கொண்டுவர துரித நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜீன் 15 -

**குவைத் நாட்டில் நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்கள் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைத்திடவும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி அறிவித்தும் காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில், 12 -6 - 2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த வீராசாமி மாரியப்பன், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எபமேசன் ராஜு, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ண மூர்த்தி சின்னதுரை,

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தன் சிவசங்கர், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த புனாஃப் ரிச்சர்ட் ராய், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கருப்பணன் இராமு மற்றும் விழுப்புரம் மாவட்டத் தைச் சேர்ந்த முகமது ஷெரிப் ஆகிய தமிழர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்ற செய்தியை அறிந்து மிகவும் அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்து வருகிறேன்.

உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு உடனடியாகக் கொண்டு வருவதற்குக் குவைத் நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அங்குள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அயலகத் தமிழர் நலத் துறைக்கு உரிய அறிவுரைகளை வழங்கியுள்ளேன். அதன் பயனாக, உயிரிழந்த ஏழு தமிழர்களின் உடல்களும், தனிவிமானத்தின் மூலம் இந்தியாவிற்குக் கொண்டுவர விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ரூ. 5 லட்சம் நிதி உதவி வழங்க உத்தரவு!**

இந்தியாவை வந்தடையும், தமிழர்களின் உடல்களை உடனடியாகத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இந்நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

**காயமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகள்!**

இது மட்டுமல்லாமல், இந்தக் கொடிய தீவிபத்தில் காயமடைந்து, குவைத் நாட்டிலேயே, சிகிச்சை பெற்று வரும் நம் தமிழ்ச்சொந்தங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டிடு மாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு நான் அறிவுரை வழங்கியதையொட்டி, உரிய நடவடிக்கைகளை அத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைந்து குண மடைய தேவையான உதவிகளை குவைத் நாட்டிலுள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து அயலகத் தமிழர் நலத் துறை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குவைத் நாட்டில் பணிபுரிந்து வரும் தமிழர்கள், அங்கு கொடிய தீவிபத்திற்கு ஆளானதுடன், உயிர்களை இழந்தும், தீக்காயங்களுக்குச் சிகிச்சைகள் பெற்றும் வரும் நிலையை எண்ணி, வேதனையில் ஆழ்ந்துள்ள என் அருமை தமிழ் நாட்டு உறவினர்களுக்கு, தமிழ்நாடு அரசு எல்லா உதவிகளையும் வழங்கிடத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொடர்புகொள்ள தொலைபேசி எண்கள்.**

மேலும், இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு அயலகத் தமிழர் நலத்துறையின் கீழ்க்காணும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிற்குள் தொடர்பு கொள்வதற்கு உரிய தொலைபேசி எண். +91 1800 309 3793;

அதே போன்று குவைத் நாட்டில் தொடர்பு கொள்வதற்கு உரிய தொலைபேசி எண் +91 80 6900 9900, +91 80 6900 9901. இந்த இரண்டு எண்கள் வாயிலாகவும், அயலகத் தமிழர் நலத்துறையைத் தொடர்பு கொண்டு தேவைப்படும் தகவல்களைப் பெற்றிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---


தி.மு.க. இளைஞர் அணி | கலைஞர் செய்திகள்



கலைஞர் 100 1924 - 2023

இணைந்து நடத்தும்

# என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

சமூகநீதி, பகுத்தறிவு, சுயமரியாதை, மாநில சுயாட்சி, மொழியுரிமை போன்ற திராவிட இயக்கக் கொள்கைகளில் பற்றும் ஆர்வமும் கொண்டவரா நீங்கள்?

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதன் மூலம் சமூக மாற்றங்களைச் சாதிக்க முடியும் என்று எண்ணுபவரா நீங்கள்?

பேச்சாற்றல் மூலம் மற்றவர்களைக் கவரக்கூடியவரா நீங்கள்? உங்களுக்காகத்தான் இந்தக் களம்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியும் கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் **'என் உயிரினும் மேலான'** பேச்சுப் போட்டி உங்களுக்கான வாசலைத் திறக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அன்பகம், 614, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

மேலும் www.kalaignar100pechu.org என்ற இணையதளத்தில் உள்ள 'விண்ணப்பம்' பகுதியில் உங்கள் விவரங்களைத் தந்து பதிவு செய்துகொள்ள வேண்டும். உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் முதல்கட்டத் தேர்வில் கலந்துகொள்ள உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். **விண்ணப்பிக்க கடைசி நாள் : 15.07.2024.**

முதல்கட்டத் தேர்வில் கலந்துகொண்டவர்களில் சிறப்பாகப் பேசியவர்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மண்டலம் தோறும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த இரண்டாம் கட்ட நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடைபெறும் இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் மிகச்சிறப்பாகப் பேசிய முதல் மூன்று நபர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

**'என் உயிரினும் மேலான'** நிகழ்ச்சி கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

**முதல் பரிசு ரூ. 1,00,000**
**இரண்டாம் பரிசு ரூ. 75,000**
**மூன்றாம் பரிசு ரூ. 50,000**

### பேச்சுப்போட்டித் தலைப்புகள்

- என்றென்றும் பெரியார். ஏன்?
- அண்ணா கண்ட மாநில சுயாட்சி
- கலைஞரின் தொலைநோக்குப் பார்வை
- மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞர்
- கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
- சமூக நீதிக் காவலர் கலைஞர்
- தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க.
- பேசி வென்ற இயக்கம்
- திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின்

### விதிமுறைகள்

● 18 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் போட்டியில் கலந்துகொள்ளலாம். ● போட்டி நடைபெறும் நாள், இடம் போன்ற விவரங்கள் முன்பதிவு செய்துகொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்படும் ● பேச்சுத் திறன் அடிப்படையில் சிறந்த பேச்சாளர்களை, மூன்று நடுவர்கள் தேர்வு செய்வார்கள். ● நீங்கள் பேச வேண்டிய தலைப்பு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். தலைப்பை மையமாக வைத்தே உங்கள் உரை அமைய வேண்டும். ● தனிநபர் தாக்குதல், ஆதாரமற்ற தகவல்கள், நாகரீகமற்றச் சொற்களுக்கு அனுமதியில்லை. ● படிக்கும் இடத்தில், பணிபுரியும் இடத்தில் தந்துள்ள அடையாள அட்டையை அணிந்திருப்பது அவசியம். ● போட்டியில் கலந்துகொள்பவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களாக இருப்பது அவசியம். ● நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. ● கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்படும்

### விண்ணப்பம்

| | |
|---|---|
| பெயர் | மின்னஞ்சல் |
| முகவரி | மாவட்டம் |
| மாநிலம் | நாடு |
| அஞ்சல் குறியீடு | கைபேசி எண் |
| பாலினம் | பிறந்த தேதி |

## உரக்கப் பேச, உடன்பிறப்புகளே வருக!